28

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்வெண்பா.

(திருக்குறளுத்தரார்த்தத்துடன்.)

இது

பண்டிதரத்தினம்

குகஸ்ரீ-புழலை-திருநாவுக்கரசுமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை பென்ரோஸ் அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம்பதிப்பு.

பிங்கள ௵ - ஆவணி ௴.

1917.

(*Copy Right Registered.*)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்வெண்பா.

(திருக்குறளுத்தரார்த்தத்துடன்.)

இது

பண்டிதரத்தினம்

குகஸ்ரீ-புழலை-திருநாவுக்கரசுமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை பென்ரோஸ் அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றும்பதிப்பு.

பிங்கள ௵ - ஆவணி மீ.

1917.

(Copy Right Registered.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சாத்துகவி.

இது
திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறையாதீனம்
ஸ்ரீமத்--சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிகள்
அருளிச்செய்தது.

வெண்பா.

திருத்தொண்டர் வெண்பா திசையனைத்து மோங்கத்
திருத்தியச் சிட்டான் றெளிவாய்—பொருத்தமுற
நற்றமிழ்தொல் காப்பியங்க ணண்ணு நயமனைத்துங்
கற்ற திருநாவுக் கரசு.

குறிப்பு:—இதுகாறும் தமிழ்நாட்டில் திருக்குறளினில் வரிசையாக அதிகாரம் ஒன்றுக்கு ஒரு திருக்குறளினை உத்தாரார்த்தமாகக் கொண்டு அதற்கியைந்த கதையினைப் பொருத்திப் பாடியுள்ள சோமேசர்வெண்பா, சிவசிவவெண்பா, முருகேசர்வெண்பா, அரங்கேசர்வெண்பா என்னும் நூல்கள் வழங்கிவருகின்றன. இத்திருத்தொண்டர்வெண்பா, அவைபோல்வதன்றித் திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்திற்குறித்த அறுபத்துமூன்று நாயன்மார்கள் சரித்திரங்கட்குத் தகுதியாகத் திருக்குறள்களை உத்தாரார்த்தமாகக்கொண்டு பாடி யாவராலும் கொண்டாடத்தக்க அருமையான நூலாயிருத்தலின் இதனை மூன்றும் பதிப்பும் அச்சிட்டு வெளிப்படுத்தலாயினேன். இதன் விலை அணா ஒன்று.

இங்ஙனம்:

பண்டிதரத்தினம்

புழலை-திருநாவுக்கரசுமுதலியார்,

(ஆனரெரி மாஜிஸ்டிரேட்)

செம்பியம், பிரம்பூர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்வெண்பா.

(திருக்குறளுத்தரார்த்தத்துடன்)

விநாயகர் - காப்பு.

தூண்டா விளக்கருள்செய் தொண்டத் தொகையினம்பி
யாண்டாரந் தாதிமுறை யன்பானோர்க்—கீண்டியமெய்
வள்ளுவர்நூல் வெண்பா வகுத்துரைப்ப நாரையூர்ப்
பிள்ளையா ரைத்தொழுது பின்.

அவையடக்கம்.

மைவைத்த கண்டர் மறைவாக்கி னாற்புகழ்ந்த
சைவத் தலைவரன்பு சாற்றுதல்யான்—கைவைத்
தாங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (சுக-அதிகாரம் க-குறள்)

உபகாரம்.

தூயதிருத் தொண்டத் தொகைதந்து சுந்தரர்தா
மாயிருஞா லத்தோரை வாழ்வித்தா—ராயதெவன்
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. (உஉ—க)

நூல்.

தில்லைவாழந்தணர்.

பூவா யிரம்பேர் புகழ்கூத்த ரைத்தில்லை
மூவா யிரம்பேர் முதலெனக்கொண்—டோவா
ரகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க—க) (க)

திருநீலகண்டநாயனர்.

ஆலகண்ட ராணைகொண்டில் லாளெதிர்செல் லாதுதிரு
நீலகண்ட ரைம்பொறிமா நீக்கினர்—மேலா
யுரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (௩—௪) (உ)

இயற்பகைநாயனர்.

வயற்பகையுள் ளுள்ளுவப்ப மாதவர்க்கில் லாளை
யியற்பகையி கழ்ந்தெள்ளா தீந்தார்—செயற்பா
லிகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து. (௧௦௬—எ) (௩)

இளையான்குடிமாறநாயனர்.

உய்வித் தரனடியார்க் கோரிருளிற் போய்மாறன்
செய்வித்தும் வாரியன்னஞ் செய்தாரே—மெய்வருந்தி
வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். (௯—ரு) (௪)

மெய்ப்பொருணயனர்.

பொய்ப்பொருண்மாற் றன்புரிந்த பொய்த்தவவேடம்
பொருளாய், மெய்ப்பொருளார் கண்ட விதந்தானே—மெய்ப்
பொரு, ளெப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்,
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (௩௬—ரு) (ரு)

விறன்மிண்டநாயனர்.

அறன்மண்டு சுந்தரனை யாரூ ரரனை
விறன்மிண்டர் தாமே வெகுண்டார்—மறமன்
றுறுஅ தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொ
லொல்லை புணரப் படும். (௧௧௦—௬) (௬)

அமர்நீதிநாயனர்.

நிரப்புபொருள் சேவொடமர் நீதிமனை யாளோ
டரன்கோ வணத்தட் டதனே—ரிருந்தார்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. (௧உ—அ) (எ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அளந்தருள்செம் பொன்மணிமுத் தாற்றிலிட்டா ரூரர்
குளந்தனிலே கண்டெடுத்துக் கொண்டா—னுளைந்து
பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. (௫அ—௬) (அ)

எறிபத்தநாயனார்.

பத்தர்பூ மூழி பறித்தகரி பாகரைக்கொன்
றித்தலவேந் தஞ்ச வெறிபத்தர்—கைத்தார்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. (௫—௯) (௯)

ஏனாதிநாயனார்.

தானாக வெல்லாதான் றன்னுதல்வி பூதியைக்கண்
டேனாதி நாத ரிகலிழந்தா—ரானுதல்
சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். (௧௧—௬) (௧0)

கண்ணப்பநாயனார்.

புண்ணப்பர் கண்ணிலென் றுபுன்கணுறாப் பீர்ந்தப்பிக்
கண்ணப்ப ரன்புறுப்பிற் கைசெய்தார்—வண்ணப்
புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. (அ—௯) (௧௧)

குங்கிலியக்கலயநாயனார்.

தலையன்பி னுல்வளைந்தார் தம்மைநிமிர்த் திட்டார்
கலையன்பின் காணிடுக்கண் காணார்—மலைவின்
மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. (௬௫—௪) (௧௨)

மானக்கஞ்சாறநாயனார்.

பஞ்சவடிக் கென்றுசிவ பத்தர்க் குவப்பமணா
வஞ்சுதைமென் கூந்தலரிந் தன்றீந்தார்—கஞ்சாற
ரீத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (உ௫—அ) (௧௫)

அரிவாட்டாயநாயனார்.

போயகமர் மாவடுவும் புண்ணியர்வா யிற்கொளப்பெய்
தாயரகத் தூறுவடுத் தாங்கொண்டார்—வீயாரோ
சாதலி னின்றாத நில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. (உரு—ம) (க௪)

ஆனாயநாயனார்.

ஆனாயர் வேயிசையி லஞ்செழுத்தை யஞ்செவிச்செந்
தேனா யரனாற்குச் செய்தனரே—கானிற்
பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல். (சுஅ—ரு) (கரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆதியிலா ரூரர்க் கமுதாக வேபரவை
வீதியெல்லா நெல்லாய் விளைந்ததே—நீதியா
னில்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை. (சு—ந) (கசு)

மூர்த்திநாயனார்.

சேர்த்திமுழங் கையெலும்புந் தேய்வுறவே சந்தனமா
மூர்த்திமது ரேசருக்கு முன்பரைத்தார்—பார்த்தீரோ
வன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. (அ—உ) (கஎ)

முருகநாயனார்.

மட்டார்தார் கண்ணி வகைசிவபூ சைக்கொருநாள்
முட்டாது செய்தார் முருகனார்—விட்டாரோ
வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (௪—அ) (கஅ)

உருத்திரபசுபதிநாயனார்.

உருத்திரமே சொல்லி யுதகத்து ளேநின்
றுருத்ர பசுபதியா ருற்றார்—திருத்தா
டவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. (உஎ—சு) (ககூ)

திருநாளைப்போவார்நாயனார்.

மூவா யிரமறையோர் மொய்ப்பத் திருநாளைப்
போவார் சிதம்பரத்துட் போயடைந்தா—ரோவாய்
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (ருக—ரு) (உ௦

திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

தொண்டர் குறிப்பறிந்த தொண்டர் திருக்குறிப்புத்
தொண்டரைத்தங் கந்தைதந்து சோதியராட்—கொண்டார்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். (எக—௩) (உக)

சண்டேசநாயனார்.

அறஞ்செயத் தாதைதா ளற்றிடச்சண் டேசர்
மறஞ்செயலே புண்ணியமாய் வாழ்ந்தார்—திறந்தெரியி
னல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. (௩அ—ரு) (உஉ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஓரா பரவைக் குமாபதியைத் தூதாக்கித்
தீராப் புலவியையுந் தீர்த்தாரே— யாரூர
ருப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். (க௩க—உ) (உ௩)

திருநாவுக்கரசுசுவாமிகள்.

தரைசேர் சமணீக்கிச் சைவஞ்சேர் நாவுக்
கரசர் வயிற்றுவலி யற்றா—ருரைசேர்ந்த
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (௩௬—௯) (உ௪)

நீற்றறைநஞ் சானைகட னேருய்த்தா ரப்பருக்கு
மாற்றமணர் பின்னிருந்து வாழ்ந்தாரோ—வாற்றரிய
நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (௩உ—௰) (உரு)

மருணீக்கி யார்தன்ம சேனருமாய் நாவுக்
கரசரப்ப ராகியின்ப மானு—ரருளா
லிருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. (ருசு—உ) (உசு)

விண்களிப்பர் காணு வியன்கயிலை வாழ்வையப்பர்
கண்களிப்ப வையாற்றிற் கண்டுவந்தா—ரெண்களிப்பக்
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (௪௦—ரு) (உஎ)

மாமணிப்பொன் மாதரெதிர் வந்துறினும் பற்றுமற்
றுமரன்பா லன்பரசர் தாழ்ந்தாரோ—வாமெனவே
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். (ருநு—கூ) (உஅ)

குலச்சிறைநாயனர்.

நலச்சிறைநீர் வேணியார் நல்லடியா ராகுங்
குலச்சிறையார் தாம்பணிதல் குன்று—ரிலக்கீழா
ரெல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (கரு—நு) (உகூ)

பெருமிழலைக்குறும்பநாயனர்.

நாவலர்கோ மான்கயிலை நாளைப்போ மென்றுமுன்போய்
மேவிமிழ லைக்குறும்பர் வீற்றிருந்தார்—யாவருக்கு
மின்னு தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னு தினியார்ப் பிரிவு. (ககசு—அ) (௩௦)

காரைக்காலம்மையார்.

என்புருவா லம்மையெள்ள வீசரெமக் கம்மையென்னு
மன்புருவாள் காரைக்கா லம்மைகாண்—முன்பே
யுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து. (சுஎ—எ) (௩க)

அப்பூதிநாயனர்.

அரசினையப் பூதி யடிகளறி வாரோ
வுரைசெயுணர் வாலுநட் புற்றார்—மருவிப்
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும். (எகூ—நு) (௩உ)

திருநீலநக்கநாயஞர்.

நலங்கொடிரு நீலநக்கர் நாதர்மே லில்லாள்
சிலம்பிவிழ வாய்மருந்து செய்தாள்—சலங்கொளுமுன்
ஞேய்நாடி நோய்முத ஞடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (கரு—அ) (ஙங)

நமிநந்தியடிகளுயஞர்.

நக்கமணர் வெள்க நமிநந்தி யாரூர்க்கு
மிக்கபுன லாலே விளக்கெரித்தார்—தக்கமனத்
தெண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (சுஎ—சு) (ஙச)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆரூறு காட்டாரை யாறணையா லாறுபெரு
காரூறு காட்டவடைந் தாரூரர்—பேருனூர்
வெள்ளத் தணைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். (சுங—உ) (ஙரு)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

வால வயதில் வளர்புகலிப் பிள்ளையார்
போல விசயம் புரிந்தவரார்—ஞாலமிசை
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ஜேன்றுமை நன்று. (உச—சு) (ஙசு)

பண்ணூர் பசுந்தமிழ்ச்சம் பந்தரெதிர் வந்தமண
ரெண்ணு யிரங்கழுவி லேறினு—ரொண்ணுது
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (அஅ—உ) (ஙஎ)

முத்தமிழ்ஞா னத்தலைவர் முன்னம் பகைசாரிப்
புத்தனெதிர் நின்றிடிபிற் பொன்றினு—னித்திறமென்
கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்
காற்றுதா ரின்னு செயல். (கூ0—ச) (ஙஅ

ஏறியவோ டக்கோ லிசைஞானச் செந்தமிழா
லாறுகடந் தார்தோணி யார்மகனுர்—வீறடங்கா
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர் தம்
முள்ளத் தனைய துயர்வு. (சுO—ரு) (௩௯)

கணவனெனக் காதலியைக் காழியர்கைப் பற்றி
மணவரையி சன்கழலாய் வாழ்ந்தார்—குணமே
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (௩ரு—அ) (சO)

ஏயர்கோன்கலிக்காமநாயனுர்.

ஈசனையாள் வாராம்வந் தென்னையாள் வாரென்று
காசினியில் மாண்டார் கலிக்காமர்—பேசின்
மருந்தோமற் றானேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்து விடத்து. (கஎ—அ) (சக)

திருமூலநாயனுர்.

பரகாயஞ் சேர்ந்தார் பசுக்களா லாட்சி
மருவாமை மாதவமே வாழ்ந்தார்—திருமூல
ரூழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். (சுஉ—ம) (சஉ)

தண்டியடிகணயனுர்.

அந்தகனென் றேசு மமணர்தங் கண்ணழிய
தந்தமொழி சாதித்தார் தண்டியார்—முந்தமொழி
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். (சுஎ—ச) (ச௩)

மூர்க்கநாயனுர்.

உருளாய மும்பொன் னுதவுதல்மூர்க் கர்க்கே
பொருளாய மற்றவர்க்கே போக்கு—மருளா
மறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (ச—உ) (சச)

சோமாசிமாறநாயனுர்.

சோமாசி மாறனுர் சுந்தரரால் யாகமினித்
தாமா றரனை யழைப்பித்தா—ராமாம்
பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர். (ரு௩—அ) (சரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

பொருட்டுறையன் பாட்டேநற் பூசையென்று நூறற்
கருட்டுறையா ரன்புசெய்வா ரானூர்—மறுட்டோ
செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். (சஉ—உ) (சசு)

சாக்கியநாயனார்.

அங்கசன்பூ வெல்லா மடுசணையே சாக்கியர்கைச்
செங்கலெலாஞ் சங்கரற்குத் தேமலரே—செங்கேழ்
கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
விணைபடு பாலாற் கொளல். (உஅ—கூ) (சஎ)

சிறப்புலிநாயனார்

எய்தமகிழ்ந் தின்சொ லுரைத் தீசனடி யார்க்கிதமே
செய்தனஞ்செய் தாரே சிறப்புலியார்—வெய்யதுறூர்
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (கூ—கO) (சஅ)

சிறுத்தொண்டநாயனார்.

காய்க்கறிவே றென்றுதொடாக் கள்ள வயிரவர்க்கோர்
சேய்க்கறிசெய் திட்டார் சிறுத்தொண்டர்—வாய்க்கினிதா
யின்னு திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. (உரு—ச) (சகூ)

கழறிற்றறிவார்நாயனார்

நெறிவார் சடையரைப்போ னீணிலத்தோர் செய்கை
யறிவார் கழறிற் றறிவா—ரறிவாரா
ரெல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். (ருகூ—உ) (ருO)

கணநாதநாயனார்.

நாட்டிலடி யாரையெல்லா நாதன் பணிவிடையே
காட்டிவாழ் வித்தார் கணநாதர்—வேட்டவர்தாஞ்
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. (கக—க) (ருக)

கூற்றுவநாயனார்.

ஆற்றறிதா மீச னடிமுடியா கப்புனைந்து
போற்றி மனக்கவலை போக்கினார்—கூற்றர்
தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. (ச—எ) (ருஉ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆரூர ரீசரைத்தூ தாக்கியநாட் கூன்குநடு
தாரோடு தாம்பூலந் தாங்கவினை—தீர்வார்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (ங—அ) (ருங)

பொய்யடிமையில்லாதபுலவர்.

மதுரையிலே ழேழ்புலவர் வல்லசிவன் பாத
மதுபொருளாப் பாவியற்றி னாரே—புதுமையோ
கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (க—உ) (ருச)

புகழ்ச்சோழநாயனார்.

தங்களத்தில் வீழ்ந்த சடைத்தலைகண் டஞ்சியஞ்சிப்
பொங்கழற்குள் வீழ்ந்தார் புகழ்ச்சோழர்—தங்கருமந்
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். (உக—உ) (ருரு)

நரசிங்கமுனையரையநாயனார்.

மூரிநர சிங்க முனையரையர் மாதவருட்
சீரியதூர்த் தற்கிரட்டி செய்தாராம்—பூரியினை
யற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (கூஅ—ம) (ருசு)

அதிபத்தநாயனார்.

மீனார்செல் வங்கெடினு மீன்வலையிற் சிக்கொருமீ
னானு மீந்தா ரதிபத்த—ரானு
திடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். (உஉ—அ) (ருஎ)

கலிக்கம்பநாயனார்.

மெய்யடியா ராயுமடி மேற்பெயுநீர் பிந்தவாள்
கையடியுங் கூர்ந்தார் கலிக்கம்பர்—மையலைக்கொண்
டில்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். (கக—ரு) (ருஅ)

கலியநாயனார்.

எள்ளாவி ளக்கரன்பா லேற்றக் கலியரில்லாள்
கொள்ளாரே யேதுங் கொடாருலகி—னுள்ளார்தா
நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. (சச—அ) (ருகூ)

சத்திநாயனார்.

அண்ணலடி யாரையிகழ்ந் தாழ்நரகி லாழாமே
தண்ணளியா னுவரிந்தார் சத்தியா—ரெண்ணமுற
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (கரு—எ) (சூ0)

ஐயடிகள்காடவர்கோனுயனார்.

நாடதனி லேதலங்க ணண்ணிநல் வெண்பாவா
லாடலர னைத்துதித்தா ரையடிகள்—காடவர்கோன்
றுமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (ச0—கூ) (சூக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சேரர்கோ னீதித் திரவியங்கள் சுந்தரர்பாற்
சோரர் கவர்ந்தொளித்துஞ் சோர்வுண்டோ—பார்க்கி
லழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. (சூசூ—கூ) (சூஉ)

கணம்புல்லநாயனார்.

கணம்புல்லர் நெய்வாங்கக் காணூர் கணம்புல்
விணங்குதலை நெய்விளக்கென் றிட்டார்—வணங்கான்பாற்
றுன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. (சூஎ—கூ) (சூந)

காரிநாயனர்.

பாரின்மூ வேந்தர் பரிசுவப்பப் பாபாடிக்
காரியா ராலயங்கள் கட்டினு—னோரிடமோ
யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (சO—எ) (௬௪)

நின்றசீர்நெடுமாறநாயனர்.

பழுதறுசம் பந்தரெதிர் பாழ்சமணர் தாழ
வழுவறுநெல் வேலிவென்ற மாறர்—கழுவிட்டா
ரந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். (௫௫—௯) (௬௫)

வாயிலார்நாயனர்.

ஆயறிவு தீப மகமல ரன்பமிர்தங்
கோயின்மன டாகவென்றுங் கொண்டிருந்தார்—வாயிலா
ரோர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (௯௬—எ) (௬௬)

முனையடுவார்நாயனர்.

வினையடுவார் வந்தடுக்க வென்றுகொண்ட கூலி
தனையடுவார் சைவர் நமக்கே—முனையடுவார்
தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (௨௨—௨) (௬எ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

தென்புகலூ ரீசனரையுஞ் சென்றுபணிந் தாரூரர்
பொன்புகலாப் பெற்றார் புகழ்பெற்று—பின்புற்று
ரொண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. (எ௬—0) (௬அ)

கழற்சிங்கநாயனர்.

தொழச்சங்க ரன்சூடாத் தூமலர்மோந் தாள்கை
விழச்சென் றறிந்து விடுத்தார்—கழற்சிங்க
ரோர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. (௫௫—௧) (௬௯)

இடங்கழிநாயனார்.

நடங்கழியா ரன்பருக்கே நற்பொருள்க ளெல்லா
மிடங்கழியா ரன்பினெடுத் தீந்தார்—முடங்கா
வருளென்னு மன்பின் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. (எசு—எ) (எ0)

செருத்துணைநாயனார்.

கருத்தனணி பூவைக் கழற்சிங்கன் றேவி
யருத்தியின்மோந் தாண்மூக் கரிந்தார்—செருத்துணையார்
வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. (எரு—சு) (எக)

புகழ்த்துணைநாயனார்

வற்கடம்வந் தூண்போய்மெய் வாடிப் புகழ்த்துணைக்கை
நற்கலசம் வீழவர னார்கொடுத்தார்—பொற்காசு
தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (சு௨—க) (எ௨)

கோட்புலிநாயனார்.

பொலிகுழவி கோட்புலியார் கொன்றார் விரையாக்
கலிகடந்த குற்றங் கடிந்தா—நுலகில்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். (ருரு—க) (எரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

மாவணங்கைக் கொண்டிடுமுன் வந்தரனார் சுந்தரர்க்கோ
ராவணங்கைக் கொண்டுமறித் தாட்கொண்டார்—நோவ
வழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். (அ0—ரு) (எசு)

பத்தராய்ப்பணிவார்.

வாய்ப்பவர னைத்தொழுது வாய்குழறிக் கண்ணருவி
தோய்ப்ப வுடனடுங்கித் தொல்பத்த—ராய்ப்பணிவா
ரன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. (அ—0) (எரு)

பரமனையேபாடுவோர்.

பரமனையே பாடுவார் பாடும் புகழா
லிருவினையுஞ் சேரா ரிவரே—மருளா
மிருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (க—ரு) (எசு)

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

அத்தனடி யல்லா லறம்பொருளின் பங்களிலே
சித்தமிலே யார்சித்தத் தைச்சிவன்பால்—வைத்தார்தாம்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (௩ரு—ம) (எஎ)

திருவாரூர்ப்பிறந்தார்.

மன்னுதிரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தா
ரன்னு சிவகணத்தி னுற்றார்ந்தா—ரின்னே
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். (கசு—கூ) (எஅ)

முப்போழுதுந்திருமேனிதீண்டுவோர்.

கருமேனி யன்பாற் கழீஇ முப் போதுந்
திருமேனி தீண்டுவார் சீர்வாழ்—வொருவார்
பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (க—சு) (எகூ)

முழுநீறுபூசியமுனிவர்.

அழுதி சனைநினைந்தே யஞ்சுபதஞ் சொல்லி
முழுநீ றணிவர்நித முட்டார்—பழுதறினு
மொல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (ச—௩) (அ௦)

அப்பாலுமடிசார்ந்தார்.

பாடுமுனைப் பாடியர்கோன் பாடலின்மெய்ப் பாடங்கொண்
டாடுவரப் பாலு மடிசார்ந்தா—ராடரன்பாற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (௩சு—சு) (அக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

பித்தரென்று வைதாற் பிழைபொறுத்தல் மாத்திரமோ
வைத்தாரா ரூரற் கருள்புரிந்தார்—நித்த
மழிவந்த செய்பினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். (அக—எ) (அஉ)

பூசலார்நாயனார்.

வானவ்ரா வுங்கோயின் மன்னரற்குத் தன்மனமே
தானமாப் பூசலார் தாபித்தார்—ஞான
மலர்பிசை பேசினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (க—௩) (அ௩)

மங்கையர்க்கரசியார்.

ஞானசம் பந்தரங்கே நண்ணியதா லெண்ணமிலா
தானிவிளைத் தாரே யமணர்க்கு—மானியார்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (சக—ம) (அச)

நேசநாயனார்.

ஈசருடை மெய்யடியார்க் கேதேனுஞ் செய்வலென்று
நேசருடை கோவணங்கீள் நெய்தளித்தா—ராசைபுரிந்
தன்றறிவா மென்று தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. (ச—சு) (அரு)

கோச்செங்கட்சோழநாயனார்.

முந்திலாற் செங்கணார் மூண்டானைக் காவினும்பின்
றந்திபுகா வாயில் சமைத்தாரே—பெந்தைக்
குடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. (அக—ம) (அசு)

சிலம்பியா னாற்கோயில் செய்தசெங்க ணார்பின்
றலங்கடொறுங் கோயில் சமைத்தாரே—நலங்கூர்
தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. (உஎ—உ) (அஎ)

திருநீலகண்டயாழ்ப்பாணர்.

கானத் திருநீல கண்டயாழ்ப் பாணரைப்போல்
ஞானத் தலைவருக்கு நட்பினரார்—மானத்து
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. (சஉ—கூ) (அஅ)

சடையநாயனார்.

ஆம்பற்றி னூற்சடைய ராலால சுந்தரரைத்
தாம்பெற்ற பேறு தவப்பேறே—யோம்பிற்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (எ—க) (அகூ)

இசைஞானியார்.

உற்றவிசை ஞானியா ரோங்குபுகழ் சுந்தரரைப்
பெற்றதினு மன்புமிகப் பெற்றாரே—முற்றறிவா
லீன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். (எ—கூ) (கூ0)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சுனிந்திதையங் கண்டார் கமலினியுங் காவி
லனிந்திதையுஞ் சுந்தரர்கண் டாங்கே—புனைந்துரைத்தென்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. (ககO—கO) (கூக)

சுந்தரரைக் கண்டலர்கொய் தோகையர்சென் றொருநா
ளெந்தைகயி லைக்கவரா யின்றளவும்—வந்ததே
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. (ககரு—சு) (கூஉ)

அங்கருளா லாரூர ராசையுற வேபாவை
சங்கிலியார் மானேய் தணிவித்தா—ரெங்கோன்
பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து, (ககக—உ) (கூங)

சீரூர் கயிலையினுஞ் செல்லுநாள் வில்லவனை
யாரூரர் சிந்தித் தழைத்தகன்றா—ரோரூர்
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. (எகூ—சு) (கூச)

தள்ளாது சேரரொடு தாங்கயிலைக் காரூரர்
வெள்ளானை மேற்சென்றார் விண்ணாரு—புள்ளமிசை
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். (உஎ—ரு) (கரு)

நாவலர்வெள் ளானை நடத்தவுப மன்னியர்போ
லாவலுடன் கண்டுபணிந் தார்களோ—தேவர்
பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. (கஅ—அ) (கசு)

பாலாழி யுண்ட பழமுனிசொன் னான்முனிவர்க்
காலால சுந்தரர்சொல் லங்கினிதாய்—மேலாம்
பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. (கo—ரு) (கஎ)

தம்முடைய தோழர்வரத் தம்முடைய தோழரையும்
வம்மினென வெண்கயிலை வாழ்வித்தா—னெம்மிறைவ
னட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. (எக—க) (கஅ)

சொல்வைத்த சொல்லாறச் சொல்லக் கயிலையரன்
செல்வத் திருச்செவியிற் சேர்ந்ததே—மல்வைத்த
செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. (சஉ—க) (கக)

திருத்தொண்டர்வெண்பா முற்றிற்று.

---

* திருத்தொண்டர் துதி

காப்பு.

சீரார்நற் சைவத் திருத்தொண்ட ரைத்துதிக்க
நாரார்வி நாயகனை நாடு.

தில்லைமறை யோர்க ளிருநீல கண்டரில்லா
ளில்லையென நீந்தா ரிளையான்றன்—றொல்குடியார்
மெய்ப்பொருள்வி றன்மிண்டர் மேவுமமர் நீதியார்
மெய்ப்பதங்கொண் டேத்திமகிழ் மின். (க)

எறிபத்த ரேனாதி யெய்தியகண் ணப்பர்
செறிகலையர் மானக்கஞ் சாற—ரறிஞரரி
வாட்டாய ரானயர் மன்னுமலர்ப் பாதமதை
வேட்டவர்தா ளென்றனுச்சி மேல். (உ)

மூர்த்திமுரு கர்ருத்ர மொய்ப்பசுப திச்செல்வர்
சீர்த்திமிகு தெய்வச் சிதம்பரத்தி—லார்த்த
திருநாளைப் போவார் திருக்குறிப்புத் தொண்டர்
திருநாளைக் கொண்டாடிச் சேர். (௩)

அப்பர் குலச்சிறையா ராயமிழ லைக்குறும்பர்
அப்பூதி காரைக்கா லம்மையார்—செப்பரிய
நன்னீல நக்கர் நமிநந்தி யார்கழற்கீழ்
உன்னுமன மெந்நேர மும். (௪)

பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
தெய்வநர சிங்கரதி பத்தரோடு—செய்யமகிழ்
வார்கலிக்கம் பர்கலிய ரையடிகள் காடவர்கோன்
பேர்கமழச் செப்புவதென் பேறு. (௫)

வம்பமணர் வல்வழக்கை வாதிலற வேயொழித்த
சம்பந்த ரேயர்கோன் சார்மூலர்—நம்பியசீர்
தொன்மைத்தண்டி மூர்க்கருடன் சோமாசி மாறனார்
நன்மைதரும் பொற்கழலை நாடு. (௬)

சாக்கியர்சி றப்புலியார் தக்கசிறுத் தொண்டருயிர்
காக்குங் கழறிற் றறிவார்கண்—ணேக்கமிகு
நாதன் பணிவிடையே நாடுங் கணநாதர்
பாதபங்க யத்தையே பாடு. (௭)

கணம்புல்லர் காரிநின்ற சீர்நெடுமா றன்பால்
வணம்புல்லு மீசனருள் வாயிலார்—மணம்வாழ்
முனையடுவார் பொன்னனையார் மொய்குழலார் நேசர்
தனையடுவார் தாண்மறவேன் சார்ந்து. (௮)

எந்தைகழற் சிங்க ரிடங்கழிசெ ருத்துணையார்
புந்திமகிழ் வெய்தும் புகழ்த்துணையார்—சிந்தையுறக்
குற்றங் கடிந்தொரு கோட்புலியார் பொற்பாதம்
பெற்றவரை நற்றுணையாப் பேண். (௯)

நார்பத்த ராய்ப்பணிவார் நற்பரம னைப்பாடு
வார்சிவன்பாற் சித்தத்தை வைத்தாரா—ரூர்பிறந்தா
முப்போதுமேனிதொடு வோர்முழுநீ றிட்டிடுவோர்
அப்பா லடிசார்ந்தார்க் காள். (௰)

பூசலார் பூவை யருக்கரசி செங்கணார்
நேசர்திரு நீலகண்ட யாழ்ப்பாணர்—வாசச்
சடையரிசை ஞானியார் சற்குருவா ரூர
ரிடைவைப்பா யன்பினை யே. (௰௧)

திருத்தொண்டர் துதி முற்றிற்று.

*குகஸ்ரீ-பண்டிதரத்தினம்-புழலை-திருநாவுக்கரசுமுதலியாரியற்றியது.